








# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

**தொகுத்தளிப்பவர் : ஶ்ரீ ப ரா வி**

**மலர் 1** **இதழ் 4** **22.01.2025**





ஸ்ரீமதே ஸ்ரீ வராஹமஹாதேசிகாய நம:

# உள்ளே....

## படிக்க வேண்டிய உபதேசங்கள்

1. பாதுகாஸஹஸ்ரம்
2. பூர்வாசார்யர்களால் அனுஷ்டித்துத் காண்பிக்கப்பட்ட தர்மம்
3. நம்பிள்ளையின் முத்துக்கள்
4. உடையவர் சிஷ்யர்களுக்கு நியமித்தருளின வார்த்தைகள்
5. வரததேசிகர் காலக்ஷேப கோஷ்டி
6. திருத்திப் பணிகொள்வான்



# 1. பாதுகாஸஹஸ்ரம்
## திருக்குடந்தை ஸ்ரீமத் ஆண்டவன் ஸ்ரீமுகம்

ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த க்ரந்தங்கள் **"பரச்சதம் வாபி பரஸ்ஸஹஸ்ரம் ஸ்ரீ வேங்கடாசார்ய க்ருதா "ப்ரபந்தா:"** என்கிற கணக்கிலே பல உள்ளன. அவைகளுள் பாதுகாஸஹஸ்ரம் என்பது ஒரு தலைசிறந்த க்ரந்தம். பெரிய கோயில் என வழங்கா நிற்கும் திருவரங்கத் திருப்பதியில் கோயில் கொண்டிருக்கும் ஸ்ரீரங்கநாதனுடைய திருவடி நிலை ஆழ்வாரைத் துதித்த நூல், இதில் 1008 ச்லோகங்கள் அடங்கியிருக்கின்றன. இந்நூலில் சொல்லணி, பொருளணி, முதலிய சிறப்புக்கள் பொலிந்து கிடக்கின்றன என்பதை **"வ்ருத்திபிர்பஹுவிதாபி ராச்ரிதா வேங்கடேச்வரகவே: ஸரஸ்வதீ"** என்று இந்நூலாசிரியரே அருளிச் செய்துள்ளார். இக்கிரந்தம் ஒரே இரவில் ஒரே யாமத்தில் இயற்றப்பெற்ற பெருமையுடையது. இது ஸ்ரீவால்மீகி பகவான் அருளிச்செய்த ஸ்ரீமத் ராமாயணம்போல் அவரவர் விரும்பிய பலன்களை வழங்கும் நூல். இவ்வுண்மையை **"தத்தே முகுந்தமணி பாதுகயோர் நிவேசாத் வல்மீக ஸம்பவகிரா ஸமதாம் மமோக்தி:"** என்ற அவர் திருவாக்காலேயே அறியக் கிடைக்கிறது. இதில் பல ச்லோகங்கள் இஷ்டஸித்தியை கொடுக்கக் கூடிய மந்த்ரங்களால் சேர்க்கப்பட்டிருக்கிறபடியால், பாராயணம் பண்ணுகிறவர்களுக்கு அவ்வோ **பலன்கள் கிடைக்குமென்பது ப்ரத்யக்ஷஸித்தம்**

இது முப்பத்திரண்டு பத்ததிகளாக வகுக்கப்பட் டிருக்கிறது. பத்ததி என்பது வழி (மார்க்கம்) எனப்பெறும்.
முப்பத்திரண்டு வழிகளால் பாதுகையை வழிபடுவது என்பது பொருள். உபநிஷத்துக்களில் பகவானை உபாஸிப்பதற்கு **32 வித்யைகள்** சொல்லப்பட்டிருக்கின்றன. **"பரவித்யை"** எனப் பெயர் பெறும். இவைகள் பாதுகையை உபாஸிப்பதற்கும் 32 வழிகள் சொல்லப்பட்டிருக்கின்றன.

இந்நூல் பாதுகையை பற்றிய ஸ்தோத்ரமாயிருப்பினும் நம்மாழ்வாரைப் பற்றிய ஸ்தோத்ரரூபமான நூலுமாகிறது. பகவானுடைய பாதுகையே ஆழ்வாராகையால் இது பாதுகாஸ்தோத்ர மன்றிக்கே ஆழ்வார் ஸ்தோத்ரமுமாம். இதில் 100 ச்லோகங்களடங்கிய **"நாதபத்ததி"** என்பது ஸ்ரீரங்கநாதன் பாதுகையை சாத்திக்கொண்டு எழுந்தருளுகிறபோது பாதுகையிலிருந்தெழும் சலங்கையில் இன்னொலியைப் பேசுகின்ற பத்ததி. இதற்கு 100 ச்லோகங்கள் அமைத் திருப்பதில் ஒரு விசேஷமுண்டு. நம்மாழ்வார் அருளிச்செய் திருக்கும் திருவாய்மொழி என்கிற திவ்யப்ரபந்தத்தின் நூறு பதிகங்களுடைய பொருளைக் கூறுவதாய் இப்பத்ததி அமைந்திருக்கிறது.

இந்நூல் ஸ்ரீமத் ராமாயணம்போல் பஞ்சஸம்ஸ்கார காலத்திலேயே ஸ்ரீமதாண்டவன் ஸம்ப்ரதாயத்தில் உபதேசிக்கப்பட்டு வருகிறது. இந்நூல் முழுமைக்கும் நம்மாழ்வார் விஷயமாகவும் பொருள் கூறலாம். **இது ஸ்ரீமதாண்டவன் ஸம்ப்ரதாயத்தில் பூர்வாசார்யர்களின் உபதேச பரம்பரையாகக் கேட்டறியும் விஷயம், ஸ்ரீபாதுகா உபாஸந் ஸம்ப்ரதாயம் உள்ளவர்களுக்கே உரிமையானது.** இந்த ஸம்ப்ரதாயத்தில் ஸுப்ரஸித்த

வைபவராய் எழுந்தருளியிருந்த **தேரழுந்தூர் ஆண்டவன் என்கிற ஸ்ரீ வேதாந்த ராமானுஜ மஹாதேசிகன் (நம்மாண்டவன்)** இதற்குத் தமிழில் ஒரு வ்யாக்யானம் செய்துள்ளார். தான் ஸம்ப்ரதாயத்தின் வழியே வந்த அர்த்தங்களையெல்லாம் மிகத் தெளிவாக சொல்லி யிருக்கிறார். 860 ச்லோகங்களுக்கு வ்யாக்யாநம் செய்தருளி பிறகு திருமேனி பாங்கில்லாமையால் தன்னிடம் ஸகலார்த்தக்ரஹணம் செய்த ஸ்ரீமத் ஆக்கூர் ஆண்டவனை மிகுதிக்கு பொருள் எழுதும்படி நியமித்ததின் பேரில், ஸ்ரீமதித்யாதி ஆக்கூர் ஆண்டவனும் அவ்வண்ணமே செய்து இரண்டையும் சேர்த்து அச்சிட்டு, 40 வருஷங்களுக்கு முன்பேயே வெளியிட்டிருப்பது யாவரும் அறிந்ததே. ஸம்ஸ்க்ருத பாஷையில் இப்பாதுகா ஸஹஸ்ரத்திற்கு உரைகள் இருந்தபோதிலும் அவைகள் எல்லோருக்கும் பயன்படாது இருப்பது பற்றி எளிய தமிழ் நடையில் இந்த வ்யாக்யானம் அருளிச்செய்தபடி, ஆண்டுகள் பல கடந்தமையால் இவ்யாக்யாநம் கிடைப்பது அரிதாய் விட்டது. மூலம் தேவநாகரலிபியிலும் தமிழிலும் அச்சிடப் பட்டிருக்கிறது. இதன் முதல் பாகம் நாளது ஸாதாரண ஆவணித் திங்கள் பூரட்டாதி நன்னாளில் நம்மாண்டவன் அவதார தினத்திலேயே வெளியிடப் பெறுகிறது.

மற்றொரு முக்கியமான விஷயம். கோயிலில் அமர்ந்திருக்கும் ஸ்ரீ ரங்கநாதனுடைய ஸகல உத்ஸவங்களையும் ஸ்வாமி தேசிகன் ஸஞ்சாரபத்ததியில் அனுபவிக்கிறார் கோயிலில் பெருமாளுக்குக் காலையில் விச்வரூபம் முதல் இரவு பர்யங்காஸநம் வரையில் பெருமாள் ஸேவையை அனுபவிக்கிறார். பெருமாள் ஆஸ்தானத்திலிருந்து மண்டபங்களுக்கு ஆறாதனம் கண்டருள எழுந்தருளும் போது நடுவே நடக்கும் உபயங்களையும் அனுபவிக்கிறார். இந்தப் பாதுகைக்கு காவேரி மணற்திட்டில் உள்ள வைபவத்தைப் பரக்கப்பேசுகிறார். திருவேங்கடமுடையானுக்கு திருவநந்தாழ்வானின் பெருமை எப்படியோ. மேல் கோட்டையில் திருநாராயணப் பெருமாளுக்கு திருமுடிப் பெருமை எப்படியோ, அப்படியே இருப்பது அரங்க நகரப்பன் அழகிய மணவாளனுடைய பாதுகாப்ரபாவம் என்பது நாடு நகரமும் நன்கறியும். பெரிய பெருமாள் கண்டு உவக்கும் **"பூச்சாத்து" உத்ஸவம்** இந்த ஸ்தோத்ரத்தில் அழகாக
எழுதப்பட்டுள்ளது.
இப்படி இந்தக்ரந்தத்தை பாராயணம் பண்ணும் காலத்திலேயே **"ப்ரத்யக்ஷமிவ ஸம்வ்ருத்தம்"** என்கிறபடி பெரிய பெருமாளை நேரில் அனுபவிக்கலாம்படி யிருக்கும்.இதனால் ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகனுடைய ஸ்ரீரங்க வாஸப்பெருமையும் அரங்கத்திலிருந்து அழகிய மணவாளனை அனுபவித்த பெருமையும் நன்கு புலப்படும். அர்ச்சாவதாரங்களுக்குள் இப்பூமியிலுள்ள அர்ச்சா மூர்த்திகளுக்குள் ஒருவரிடமும் காண அரிதான நடையழகுக்குக் காரணமும் புலப்படும்.



# 2. பூர்வாசார்யர்களால் அனுஷ்டித்துத் காண்பிக்கப்பட்ட தர்மம்

**தேரழுந்தூர் ஸ்ரீமதாண்டவன்** காலம், மன்னார்குடியில் ப்ரஹ்மோத்ஸவம் ஸேவிக்க எழுந்தருளியாயிற்று. வெண்ணைத்தாழி உத்ஸவம் முடிந்ததும் மறு தினம் திருத்தேர். ஸ்ரீமதாண்டவன் ஹரித்ராநதி மேல் கரையில் பாதுகா ஆராதனத்தை முடித்து ஸ்ரீராஜகோபாலனின் மங்களாஸாஸனத்திற்காகத் தேரடிக்கு எழுந்தருளியாயிற்று. தேரில் எழுந்தருளியிருந்த பெருமாளையும் கீழே இருந்தபடியே மங்களாஸாஸனம் செய்தருளியாயிற்று. அப்போது கூட இருந்தவர்களில் சிலர் இன்று தேர் இழுக்கமாட்டார்களாம். ஏதோ ஸாமான்கள் தேவைப்படுகிறதாம். ஓரிரு தினங்களுகம் ஆகலாமாம். இப்படிப் பேசப்பட்ட விஷயத்தைச் செவி சாய்த்ததுமே அந்தரங்கமானவர்களை நிமியத்து ஆச்ரமம் சென்று பெருமாள் மற்றும் பாதுகைகளை ஏளப் பண்ணி வந்துவிடுங்கள். வடுவூருக்குச் செல்வோம் என்று நியமித்தவாறே சிஷ்ய பரிஜனங்களும் அரைமணி நேரத்தில் பெருமாள் மற்றம் பாதுகைகளை எழுந்தருளப்பண்ணி வந்து ஸ்ரீமத் நம்மாண்டவன் கூடவருகிறவர்களுடன் வடுவூர் எழுந்தருளியாயிற்றாம்.

பகல் சுமார் 11.30 மணியிருக்குமாம். நேராக ஸ்ரீசக்ரவர்த்தித் திருமகன் ஸந்நிதி சென்று மங்களாமாஸனம் செய்து ஆச்ரமம் செல்வோம் என்றபடி, ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகள் ஸந்நிதியில் த்வஜஸ்தம்பத்தடியில் நிமிர்ந்து பார்க்கும் போது வயதான ஒரு ஸுமங்கலி ஸ்த்ரீ தென்பட அந்த அம்மாளை - பூர்வாச்ரமத் திருத்தாயாரை ஸம்பூர்ணமான ஸாஷ்டாங்கமாக நான்கு தடவை ப்ரணாமங்களைச் செய்து எங்கு வந்தாய் ? அந்தப் பெரியவரை (தன் பூர்வாச்ரம திருத்தகப்பனாரை) யார் கவனித்துக் கொள்வார்கள்? இந்த ஸமயத்தில் பெருமாள் ஸேவை அவச்யமா? என்று ஸ்வாதீநமாகக் கடிந்தும் கொண்டாராம்!

எதற்காக இவ்வளவு தூரம் எழுதுகிறேன் என்றால் நம் பூர்வாசார்யர்களால் அனுஷ்டித்துத் காண்பிக்கப்பட்ட தர்மம். ஆதலால் மற்றவர்கள் விஷயத்தில் துரீய (நான்காவது) ஆச்ரம தர்மம். மாதா பிதா விஷயத்தில் மாதா பிதாவாகத்தான் பார்க்க வேண்டும் என்கிறதும் இங்கு ஸன்யாஸாச்ரம தர்மம் பிரவேசிக்காது என்பதும் ஸுப்ரஸித்தம்.



# 3. நம்பிள்ளையின் முத்துக்கள்

## 1. ஸுகம் மூன்று விதம்

நம்பிள்ளை ஒரு ஸமயம் திருவெள்ளறையில் தேன்கொள் சோலை தாஸர் திருமாளிகைக்கு எழுந்தருளினார். அங்கு அவருடைய ஐச்வர்யத்தைக் கண்டு ஸந்தோஷப்பட்டார். அதைக் கண்டு யதிராஜதாஸர் என்பவர், "இப்படியும் கூடுமோ?" என்று கேட்டார். அதற்கு நம்பிள்ளை, "இந்த ஸம்ஸார ஸுகம் மூவகைப்பட்டிருக்கும்.

1. இந்த ஸுகத்தை (ஐச்வர்யத்தை)த் தனக்கென்று எண்ணுவது நரகாநுபவ ஸத்ருசமாம்.
2. தனக்கும் எம்பெருமானுக்கும் என்று எண்ணுவது ஸ்வர்க்காநுபவ துல்யமாம்.
3. எம்பெருமானுக்கே
என்பது பரமபதத்தில் உண்டாகும் அநுபவ துல்யமாம்" என்று அருளிச்செய்தார்.

## 2. பாகவதாபசாரம் பன்னிரண்டு விதம்

நம்பிள்ளை காலக்ஷேபம் ஸாதித்துக்கொண்டு எழுந்தருளி யிருந்தபோது பாகவதாபசாரத்தைப் பற்றிய ப்ரஸ்தாவம் வந்தது. அப்பொழுது பிள்ளை அதைப்பற்றிப் பரக்க உபந்யஸித்தார். **பாகவதாபசாரம் பன்னிரண்டு வகைப்ப டும்**.
1. பாகவதர்களுடைய ஜன்மத்தைப் பற்றிப் பேசுவது,
2. சரீரத்தைப் பற்றிப் பேசுவது,
3. பாக நிரூபணம்,
4. ஆச்ரமத்தைச் சொல்லுவது,
5. அவயவத்தைப் பற்றிப் பேசுவது,
6. ஆலஸ்யத்தைப் பேசுவது,

7. இருப்பிடத்தைப் சொல்வது,
8. பந்துக்களைப் பற்றிப் பேசுவது,
9. ப்ரகாச நிரூபணம்,
10. ப்ரகார நிரூபணம்,
11.வர்த்தன நிரூபணம்,
12. தோஷ நிரூபணம் என்பன.

இவற்றில் எதைப்பற்றிப் பேசினாலும் பாகவதாபசாரப் பட்டதாகும். **பாகவதாபசாரம் மிகக் கொடியது**. அதற்கு ஓர் உதாஹரணம் கூறுகிறோம். கோயில் திருமலை பெருமாள்கோயிலிலிருந்து எழுந்தருளும் ஸ்வாமிகளை (பாகவதர்களை) எவ்விதம் உபசரிப்பீர்களோ அவ்விதமே சிறியதோர் கிராமத்திலிருந்து எழுந்தருளும் ஸ்வாமிகளையும் உபசரிக்க வேண்டும். அவர்கள் இருப்பிடம் திவ்யதேசமல்லவே என்று உபேக்ஷித் சுக்கூடாது.

**அவர்கள் இருப்பிடத்தைப் பற்றி இளப்பமாக நினைப்பதே அபசாரமாகும்.**

# 4. உடையவர் சிஷ்யர்களுக்கு நியமித்தருளின வார்த்தைகள் .


1. ஸ்ரீபாஷ்யத்தை வாசித்து ப்ரவர்த்திப்பித்தல், அதற்கு யோக்யதை இல்லையாகில்,

2. அருளிச்செயலைக் கேட்டு ப்ரவர்த்திப்பித்தல். அதற்கு யோக்யதை இல்லையாகில்,

3. உகந்தருளின திவ்ய தேசங்களுக்கு அமுதுபடி, சாத்துப்படி, திருவிளக்கு, திருமாலை உண்டாக்குதல். அதற்கு யோக்யதை இல்லையாகில்,

4. த்வயத்தினுடைய அர்த்தாநுஸந்தானம் பண்ணுதல். அதற்கு யோக்யதை இல்லையாகில்,

5. என்னுடையவன் என்று அபிமானிப்பான் ஒரு ஸ்ரீவைஷ்ணவனுடைய அபிமானத்தில் ஒதுங்கி வர்த்தித்தல் செய்யலாம்"



# 5. வரததேசிகர் காலக்ஷேப கோஷ்டி (நடாதூர் அம்மாள்)

**चैत्रे चित्रोद्भवं काञ्च्यां देवराजगुरोः सुतम् ।**
**सुभद्रांशं गुरूत्तंसं वात्स्यं वरदमाश्रये ।।**

சைத்ரே சித்ரோத்பவம் காஞ்ச்யாம் தேவராஜகுரோ: ஸு தம் ஸுபத்ராம்ஸம் குரூத்தம்ஸம் வாத்ஸ்யம் வரதமாஸ்ரயே

ஸுபத்ராம்சரான ஸ்ரீவரததேசிகர் கலியுகத்தில் (4977) பார்த்திவ வருஷம் சித்திரை மாதம் சித்ரா நக்ஷத்ரத்தில் முத்திதரும் நகரேழில் முக்கியமாம் கச்சிதன்னில் ஸ்ரீவத்ஸ கோத்ரத்தில் ஸ்ரீதேவராஜாசார்யருக்குக் குமாரராய் அவதரித்தார்.

ஒரு நாள் காலக்ஷேபம் ஆரம்பிக்க வேண்டிய வேளையில் வ்யாஸார்யர் (ஸுதர்சநாசார்யர்) வர விளம்பம் ஏற்பட்டது.

அவருக்காகக் காலக்ஷேபத்தை ஆரம்பிக்காமல் நிறுத்தி வைத்திருந்தார். மற்றச் சிஷ்யர்களுக்கு இவ்விஷயத்தில் கொஞ்சம் மனவருத்தம் உண்டாயிற்று. ஸுதர்சநாசார்யர் விளம்பித்து வந்துவிட்டார். அவர் வந்ததும் ஸ்வாமியைத் தண்டம் ஸமர்ப்பித்து நின்றார். அருகில் இருந்த மற்ற அந்தேவாஸிகள் அவரைப் பரிஹஸித்தனர்.

இதைக் கண்டு ஸ்ரீவரததேசிகர், "இத்தனை காலமாக நீர் காலக்ஷேபம் செய்து வந்துள்ளதில் ஏதாவது ஒரு விஷயத்தைச் சொல்லும்" என்று கேட்டார். உடனே ஒரு விஷயத்தை எடுத்துக் கொண்டு நன்கு உபந்யஸித்ததுடன், முதல் தடவை காலக்ஷேபத்தின்போது இவ்விதம் உபந்யஸிக்கப்பட்டது, இரண்டாவது தடவை இவ்வர்த்தம் என்று பல தடவைகளில் உபதேசித்த பல விஷயங்களை க்ரமமாகச் சொல்லிப் போந்தார். இதைக் கேட்டு மற்றவர்கள் வெட்கித் தலைகுனிந்தனர்.

ஆசார்யனும் ஸந்தோஷப்பட்டுத் தாம் உபதேசித்த அர்த்தங்கள் அனைத்தையும் பட்டோலைப்படுத்தும்படி நியமித்தார் (எழுதச் சொன்னார்) அதன்படியே பட்டோலை பண்ணி (எழுதி) ஸமர்ப்பித்தார். ஸுதர்சநாசார்யர் தாம் கேட்ட அர்த்தத்தை ப்ரகாசப்படுத்தியதனால் அதற்கு 'ஸ்ருதப் ரகாசிகை' என்று பெயரிட்டார். ஸ்ரீபாஷ்யத்துக்கு முதலில் அமைந்த வ்யாக்யாநம் இதுவேயாம்.

ஒரு ஸமயம் தேவாதிராஜனுக்கு அத்யுஷ்ணமாக (மிகவும்) சூடாக)ப் பாலைக் காய்ச்சி வந்ததை ஸுகோஷ்ணமாகச் செய்து ஸமர்ப்பிக்க, அருளாளனும் தாயாரைப் போல் மிக்க பரிவுடன் ஸமர்ப்பித்ததைக் கணிசித்து 'என்னம்மா' என்று அழைத்தார். அன்றுமுதல் **'நடாதூர் அம்மாள்'** என்று அவருக்குத் திருநாமமாயிற்று.

***********************************************************************************

# 6. திருத்திப் பணிகொள்வான்

பராசர பட்டரிடம் காலக்ஷேபம் செய்து கொண்டிருந்த ஸ்ரீவைஷ்ணவர் ஒருவர் ஸஹவாஸதோஷத்தால் மதிமயங்கி ஸப்தாதி விஷயங்களில் மண்டிக் கிடந்தார். அவர் பட்டரிடம் சென்று, "ஸ்வாமிந், இனி உமக்கும் நமக்கும் ஸம்பந்தம் இல்லை" என்று சொன்னார். பட்டர், "பின்ளாய், அது உன் நினைவாலேயன்றோ? நீ விட்டாலும் நாம் உம்மை விடமாட்டோம்" என்று அருளிச் செய்தார்.

அவரும் அகன்று சென்றார்.

பட்டர் அவரைப் பலாத்காரமாகப் பிடித்து இழுத்து வைத்து நல்லுபதேசம் செய்து மிக்க ச்ரமப்பட்டுத் திருத்தி அவரைத் தம் பக்கலிலே அந்தரங்க ராக்கிக் கொண்டார். அவரும் மிக்க விரக்தராய் நல்வழிப் பட்டார்.

ஆகையால் **ஜ்ஞாநத்தினால் அகன்று போகும் அடியவர்களை அகலவிடாமல் பிரயத்தனப்பட்டுத் திருத்திப் பணிகொள்வதே ஸதாசார்ய க்ருத்யமாகும்.**



Parashara bhattar

**தனியன்**

**श्रीपराशरभट्टार्यः श्रीरङ्गेशपुरोहितः ।**
**श्रीवत्साङ्कसुतः श्रीमान् श्रेयसे मेऽस्तु भूयसे ॥**

**ஸ்ரீபராஸரபட்டார்ய: ஸ்ரீரங்கேஸபுரோஹித**
**ஸ்ரீவத்ஸாங்கஸுத: ஸ்ரீமாந் ஸ்ரேயஸே மேஸ்து பூயஸே!!**

**பட்டர் அருளிச்செய்த க்ரந்தங்கள்**

| | |
|---|---|
| **1. ஸஹஸ்ரநாம பாஷ்யம்,** | **5. ஸ்ரீகுணரத்நகோஸம்,** |
| **2. அஷ்டச்லோகி,** | **6. ஸ்ரீரங்கராஜஸ்தவம்,** |
| **3.தத்வரத்நாகரம்,** | **7. க்ரியாதீபம்,** |
| **4. ப்ரணவவிவரணம்,** | **8. தத்வ த்ரய ச்லோகம்.** |